சுருக்கம்

தொழிற்தகராறு – நிர்வாகம், தமிழ்நாடு மின்சாரவாரியம், சென்னை – எதிர் – தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு – நான்கு புனல் மின் நிலையங்கள் 1) ஈரோடு, 2) நெல்லை, 3) காடம்பாறை மின் திட்டம், 4) குந்தா நீர்மின் திட்டங்கள் – ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் உட்பட சில கோரிக்கைகள் குறித்த சமரச முறிவறிக்கை – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை

அரசாணை (டி) எண்.191 நாள்: 11.04.2016.

மன்மத, பங்குனி 29

திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:–

1. தொழிலாளர் உதவி ஆணையரின் (தலைமையிடம்) சமரச முறிவறிக்கை எண். ப2/42053/2012, நாள் 21.1.2013.
2. தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ப2/42053/2012, நாள் 18.12.2013.
3. அரசாணை (டி1) எண்.306 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை, நாள் 12.07.2013.
4. சென்னை, உயர்நீதிமன்ற உத்தரவு நகல் (நீதிப்பேராணை எண்.16485/2015 மற்றும் பல்வகை மனு எண்கள் 1 மற்றும் 2/2015) நாள் 07.01.2016.
5. தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ப2/29902/2015, நாள் 09.09.2016.

-------

ஆணை:

கீழ்க்காணும் அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்:–

அரசாணை (டி1) எண்.306 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை, நாள் 12.07.2013--க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:–

திருத்தம்

தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்; பார்வை 5–ல் கண்ட தொழிலாளர் ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையிலும், சென்னை, உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலும் மேற்சொன்ன தகராறை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

(த.பி.பா)

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும் 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2ஏ) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜெயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழிற்தீர்ப்பாயம், சென்னை.
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம்,
சென்னை–79.
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதற்காக)
நிர்வாகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நெ.144, N.P.K.R.R.மாளிகை, 8–வது மாடி, அண்ணா சாலை,
சென்னை – 600 002.
செயலாளர்,
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு,
நெ.27, மரூதி தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல்
தொழிலாளர் ஆணையர், சென்னை – 6.
தொழிலாளர் உதவி ஆணையர் (தலைமையிடம்), சென்னை – 6.
மாண்புமிகு ஊரகத் தொழில், தொழிலாளர் நலம் மற்றும் பால்வளத் துறை
அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை– 9.
துணை செயலரின் நேர்முக உதவியாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
சுத்த நகல் (கோ.எண்.14504/டி1/2015)
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

**இணைப்பு – எழுவினா**

**அரசாணை (டி) எண்.191, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1) துறை, நாள் 11.04.2016)**

849 தொழிலாளர்களுக்கு வாரிய உத்தரவு எண்.22/14.05.99–ன்படி நான்கு நீர் மின் நிலையங்களிலும் நிரந்தரம் செய்ய உத்தரவு வழங்கப்பட்ட கள உதவியாளர்களுக்கு 01.05.99 முதல் கள உதவியாளராக நிரந்தரம் செய்திடவும், அதற்கான ஊதியமும் வழங்கிடவும் மற்றும் அனைத்து வருகை பயன்களையும் வழங்கக்கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா ? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

புனல் மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்த போது
வாரிய உத்திரவு எண் 22, நாள் 14.05.1999 அடிப்படையில்
பணி நிரந்தரமும், நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என்ற
தொழிற் தகராறை தொழிற் தீர்ப்பாயத்திற்கு அனுப்பி பிறப்பிக்கப்பட்ட
அரசு ஆணை.